பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 84 பிரமோதூத மாசி 07
1991 பெப்ருவரி 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## கொழும்பில் அன்னையர் முன்னணியின் ஊர்வலம் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோவும் கலந்துகொள்வார்

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமைகள் மீறல்களை கண்டித்து அன்னையர் முன்னணியினர் இன்று கொழும்பில் ஊர்வலம் மற்றும் மாநாடு நடாத்துகின்றனர். நுககொடையில் நடைபெறவுள்ள அன்னையரின் மனித உரிமை மீறல் தொடர்பான மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் உரையாற்றவுள்ளார். இன்று நடைபெறவுள்ள மாநாடு தொடர்பாக நுககொடைப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மாநாட்டிற்கு விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் ஆதரவு தெரிவித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் நேற்று தெரிவித்தன.

## யாழ்ப்பாணத்தில் செயலிழந்துள்ள அரச திணைக்களங்கள்

# இடமாற்றப்படும் ஆபத்து?

### நெருக்கடியை காரணம்காட்டி அரசு முயற்சி

யாழ்ப்பாணத்தில் உள்ள சில அரசாங்க திணைக்களங்களை வவுனியா திருகோணமலைப் பகுதிகளுக்கு இடமாற்றஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் பொலிஸ் அலுவலகம் வவுனியாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. வீடமைப்புத் திணைக்களத்தை திருகோணமலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் மாகாண தபால் அதிபர் அலுவலகத்தையும் வவுனியாவுக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல மின்சாரசபை அலுவலகத்தையும் வவுனியாவுக்கு அல்லது முன்னர் போல அனுராதபுரத்துக்கு மாற்ற ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன.

சில திணைக்களங்களின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### மட்டக்களப்பில் பேக்கரிகள் மூடப்படும் நிலை தோன்றியுள்ளது

மட்டக்களப்பு பகுதியில் பேக்கரிகள் மூடப்படும் நிலை தோன்றியுள்ளது.

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 450 கிராம் நிறையுடைய ஒரு றாத்தல் பாணை 4 ரூபா 50 சதத்துக்கு விற்க பேக்கரிக்காரர் மறுத்துள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற கலந்துரை

— 04 ஆம் பக்கம் பார்க்க

### கார்த்திகை மாத ஒய்வூதியம்

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் 1990 கார்த்திகை மாதத்திற்கான சகல ஒய்வூதியங்களும் இம்மாதம் 18 ஆம் திகதி முதல் 21ஆம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### க. பொ. த. சாதாரண பரீட்சை விண்ணப்பிக்க மீண்டும் சந்தர்ப்பம்

வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்து இதுவரை காலமும் விண்ணப்பிக்காத 1990 - ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மேலுமொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்களை இன்றிலிருந்து இருவாரகாலத்திற்குள் விண்ணப்பிக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (ப11)

### அணி செய்க!

தமிழீழ நினைவோடு தனிநாத விசையோடு
தளராத பணி செய்தனை - என்றும்
எமதாசை நிறைவேற இளவேங்கை நிலைதேர
எதிரேறி நிமிர்கின்றனை - இன்று
சமருற்ற தளராது சளையாதும் ஓராண்டைச்
சரியாக நீ வென்றனை - நன்றும்
அமுதாகி அரசாகிப் பல்லாண்டு பல்லாண்டு
அணி செய்க நீ எங்களை!

(ஈழநாதத்துக்கு இன்று ஓராண்டு நிறைவு)

### மன்னாரில் குண்டு வீச்சு

மன்னார் நானாட்டான் பகுதியில் நேற்றும் இன்றும் இரு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தின. கட்டைக்காடு பகுதியிலும் தாக்குதல் நடைபெற்றது. 71

### வெருகல் அணைக்கட்டுப் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்கு

திருகோணமலை மாவட்டம் வெருகல் பகுதியில் இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் கல்லாறு முகாமில் இருந்து இராணுவத்தினர் வெருகல் அணைக்கட்டுப்பகுதிக்கு சென்று அங்கு நிலைகொண்டுள்ளனர். அலிஏலுவ முகாம் இராணுவத்தினரும் வெருகல்பகுதிக்கு சென்றுள்ளனர்.—04 ஆம் பக்கம் பார்க்க

### கொண்டச்சித் தாக்குதலில் 8 படையினர் நிலை கவலைக்கிடம்

நேற்று முன்தினம் மன்னார் கொண்டச்சிப் பகுதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் காயமடைந்த எட்டுப் பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் இரு கனிஷ்ட அதிகாரிகளும் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

புலிகள் நடாத்திய இப்பாரிய — 4 ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி பாதுகாப்பு பகுதியில் ஆனையிறவு ஷெல் வெடித்தது

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையை செஞ்சிலுவை சங்கத்தினர் பொறுப்பேற்ற பின் நேற்று முன்தினம் இரவு 1. 30 மணியளவில் பாதுகாப்பு வலையமாக பிரகடனப்படுத்திய பிரதேசத்திற்குள் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் வெடித்தன.

இதனால் திருநகர் வாசியான ஆ. வீரம்மா (60) பலத்த காயங்களுடன் வைத்தியசாலை — 04 ஆம் பக்கம் பார்க்க

### அச்சுவேலி, வல்வெட்டித்துறை நோக்கி ஷெல் வீச்சு; ஒருவர் பலி

நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி இராணுவ முகாமில் இருந்து திடீரென ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. வல்வெட்டித்துறை, அச்சுவேலிப் பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

வல்வெட்டித்துறையில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வீட்டினுள் இருந்த செந்திவடிவேல் மணிவண்ணன்(22) என்பவர்பலியானார். ஏனையோர்களான—04 ஆம் பக்கம் பார்க்க

### காரைநகரில் ஷெல் தாக்குதல் ஒருவர் பலி; பலர் காயம்

நேற்றுப் பகல் 1. 30 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து ஐயனார் கோவிலடி நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலில் நல்லையா ஜீவரட்ணம், ஜீ. சந்திரமோகன், ஜீ. பிரதீபன், ஜீ. விஜயகாந்தன் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு — 04 ஆம் பக்கம் பார்க்க

### மீன் பிடிக் கூட்டுத்தாபனத்தில் சில அதிகாரிகள் பண மோசடி

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் நான்கு உயர் அதிகாரிகள் கூட்டுத்தாபன நிதியை தமது சொந்தப் பாவனைக்கு எடுத்ததை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் 6000 ரூபாவை முற்பணமாகப் பெற்று திரும்பச் செலுத்தாமலே இளைப்பாறியுள்ளார். சில அதிகாரிகள் மீன் கொள்வனவு செய்த போது 'கொமிசன்' வாங்கியதும் தெரியவந்துள்ளது. — 04 ஆம் பக்கம் பார்க்க

# சிறிய செய்திகள்

### ஏழு சாரதிகள் இன்னமும் காவலில்

வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஏழு லொறிச் சாரதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை

வவுனியா, சாளியாபுரம் பகுதித் தடை முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகளின் சாரதிகளில் ஏழு பேர் நவம்பர் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (38)

### முன்னாள் முல்லை. ஊழியர் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கச்சேரியிலும், மற்றும் சகல அரச கூட்டுத்தாபனங்களிலும் சுயவிருப்பின் பேரில் தொழிலில் இருந்து இளைப்பாறிய சகல உத்தியோகஸ்தர்களையும் 20 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் சமூகமளிக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் கே. பொன்னம்பலம் கேட்டுள்ளார். (71)

### நானாட்டானில் தடுப்பூசி ஏற்றப்படும்

நானாட்டான் பகுதியிலுள்ள குழந்தைகள், ஏனையோருக்கான தடுப்பூசி ஏற்றுதல், மருந்து கொடுத்தல் போன்றவற்றிற்கு முருங்கனுக்கு செல்லவேண்டியுள்ளதால் பொது மக்கள் பெரும் கஷ்டங்களையும், சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். இதனைத் தவிர்க்க மன்னார் சுகாதார அத்தியட்சகர் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

முருங்கன் வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றப்படும் அதே தினத்தில் நானாட்டானிலும் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் நானாட்டான் வைத்தியசாலையில் குளிர்சாதனப் பெட்டி உறுதியின்மையையும் சமாளிக்க முடியும்.

தற்போது புதிதாக நியமனம் பெற்றுவந்துள்ள மருத்துவ அலுவலர்களை அவர்களின் வசதிக்கேற்ப கிராமிய வைத்தியசாலைகளில் கடமையாற்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் மேற்படி சுகாதார அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (71)

### பொறியியல் நெறி பரீட்சை

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த வருடம் நடைபெறவிருந்த பொறியியல் கற்கை நெறியின் பரீட்சைகள் இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அப்பீடக்கற்கை நெறித் தலைவர் அல்லது போதனாசிரியரை வந்து சந்திக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

### மீன்பிடி பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த யூன் மாதத்திற்குப் பின்னர் விவசாயம் மீன்பிடி என்பன மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதியில் பல கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

இதே வேளை பால் சேகரிப்பு நிலையம் சேதமடைந்ததையடுத்து கால்நடை வளர்ப்போரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (38)

### தபாற் பொதிகள் தவம் கிடக்கின்றன

முல்லைத்தீவு தபாலகங்களுக்கான தபாற்பொதிகள் கடந்த இருவாரங்களாக வவுனியாவிலிருந்து வந்து சேரவில்லை.

வவுனியாவில் ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையாலும், முல்லைத்தீவுப் பகுதி லொறிகள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாலுமே தபாற் பொதிகள் வருவதில் தாமத மேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது, (38)

### மீன்பிடி உபகரண திருட்டு தொடர்கிறது

அண்மைக் காலத்தில் பாஷையூர் மீனவர்களின் கம்புகளும், வலைகளும், அவற்றில் பிடிபடும் மீன்களும் களவாடப்படுவது முன்பு ஒரு பொழுதும் இல்லாத விதத்தில் அதிகரித்து வருகிறது. பிரதானமாக மண்டைதீவுக் கடலில் களங்கட்டி தொழில் செய்யும் மீனவர்களே இவ்விதம் கடற்களவினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திட்டமிட்டு செயற்படும் ஒரு கோஷ்டியே இக்களவுகளைச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## போரைச்சாட்டாக வைத்து கம்பனிகள் மூடப்பட்டன!
## தொழிலாளர் சவுதியை விட்டு வெளியேறுகிறார்கள்!!

வளைகுடா யுத்தத்தைச் சாட்டாக வைத்து சவுதி அரேபியாவில் பல வெளிநாட்டுத் தொழில் வழங்குநிலையங்கள் மூடப்பட்டு அதில் கடமை புரிந்து வந்த ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்குரிய மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பல மாதங்களாக வழங்காது இழுத்தடித்து வந்த இந்தக் கம்பனிகளின் வெளிநாட்டு உரிமையாளர்கள் வளைகுடா யுத்தம் ஆரம்பமாகியதும் அதனைச் சாட்டாக வைத்து வேலைத் தளங்களை மூடிவிட்டு மேலை நாடுகளுக்குப் 'பறந்து' விட்டனர்.

யுத்தம் காரணமாக மேற்படி வேலை வாய்ப்புக் கம்பனிகளில் பணிபுரிந்தவர்கள் சட்ட நடவடிக்கையெதுவும் எடுக்க முடியாத நிலையில் வெறுங்கையுடன் ஏமாற்றத்துடன் சவுதியை விட்டு வெளியேறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (24)

## பல்கலைக் கழகத்தில் தமிழியல் ஆய்வு

தமிழியல் ஆய்வினை ஊக்குவிக்கும் நோக்குடனும், தமிழியல் பற்றிய ஆய்வுகள் வெளிவரவேண்டுமென்ற எண்ணத்துடனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வரங்குகளை நடத்த முன்வந்துள்ளது.

தமிழியலில் ஆர்வமுடைய மாணவர்களை ஆய்வுத்துறையில் நெறிப்படுத்த இவ்வரங்குத் தொடரை ஒவ்வொரு மாதமும் பிரதி இரண்டாம், நான்காம் வாரங்களில் புதன்கிழமை தோறும் இரண்டு மணிக்கு நடத்தத் தீர்மானித்துள்ளது

இவ்வாய்வரங்கில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்க விரும்புவோர் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இவ்வரங்கில் பார்வையாளராக வந்து கலந்து கருத்துக்களைப் பகிர விரும்புவோர் தமது முகவரியை அனுப்புமாறும் தமிழ்த்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

முதல் ஆய்வரங்கு இம்மாதம் இருபதாம்திகதி பல்கலைக்கழகப் பொருளியற் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'ஈழத்தில் எழுந்த தமிழ் மருத்துவ நூல்களில் பரராசசேகரத்தின் பங்கு" என்ற தலைப்பின் கீழ் க. நாகேஸ்வரன் தன் ஆய்வைத் தரவுள்ளார்.

### நோயாளருக்கு உணவு இல்லை

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஜனவரிமாதம் தொடக்கம் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கும், சிறு சேவையாளர்களுக்கும் சமைத்த உணவு வழங்கப்படவில்லை இவ்வருடத்திற்கான உணவு ஒப்பந்தக்காரர் இதுவரை இவ்வைத்தியசாலைக்கு நியமிக்கப்படவில்லை என்றும் அறியப்படுகின்றது. (13)

## 'எமது அகச்சுதந்திரத்தை - எந்தவொரு புறத்தாக்குதலும அழிக்க முடியாது'

எமக்கு ஏற்பட்ட பாரதூரமான இழப்புக்கள் குறித்து நாம் வருந்தியதாகத் தெரியவில்லை. போர்ச்சூழலால் ஏற்பட்டுள்ள இயலாமைக்கு அறிவு பூர்வமாகவோ ஆன்மீக ரீதியாகவோ வியாக்கியானமளிப்பதுடன் திருப்தியடையும் ஆபத்துக் குறித்து நான் அஞ்சுகிறேன்.''

இவ்வாறு ''தற்போதைய சூழ்நிலை ஏற்படுத்தும் தாக்கங்கள்'' என்ற பொருளில் யாழ் பல்கலைக்கழகம் நடாத்திய கருத்தரங்கில் உரையாற்றிய வண. பிதா சா. ம. செல்வரெட்ணம் அடிகளார் (கரவையூர்ச் செல்வம்) குறிப்பிட்டார்.

எமது அகச்சுதந்திரத்தை எந்தவொரு புறத்தாக்குதலாலும் அழிக்கமுடியாது. அதை யாரும் பறிக்கமுடியாது. இப்போது நிகழும் பேரழிவுக்கூடாகவும் நாம் தேவை நோக்குள்ள இனமாக நிமிர வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

### நகரவீதிகளில் மாணவர் சிரமதானம்

யாழ் மாநகர வீதிகள் பாடசாலை மாணவர்களால் சிரமதானப்பணி மூலம் துப்பரவு செய்யப்படுகின்றன. (66)

## சிறு விளம்பரம்

### பரீட்சை நூல்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானி/தொழில் நுட்ப வியலாளர் பரீட்சைக்குரிய பொது உளச் சார்பு (IQ) நூல் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. விலை: 50/-. ஆக்கியோன் க. குணராசா, எம். ஏ. 02087

### தவறிவிட்டது

தேவகாந்தி- கந்தசாமி ஆகிய எனது அடையாள அட்டை பூநகரி - சங்குப்பிட்டிக்கிடையில் தவறிவிட்டது இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பூநகரி எரிபொருள் நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 02102

### கண்டெடுக்கப்பட்டது

கடந்த 12 ஆம் திகதி கொடிகாமத்திற்கு அண்மையில் 'சிற்ரிசன்' ஆண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் சி. யோகரத்தினம், கண்டி வீதி, மிருசுவில் என்னும் முகவரியில் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். 02105

## சேவை

1. தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
2. வெளிநாடு செல்பவர்களுக்கும், ஏனைய, சகல மாணவர்களுக்குமான ஆங்கிலக்கல்வி (Spoken English, Grammar) இலகுமுறையில்கற்பிக்கப்படும்.
3. பத்திரிகைகளுக்கான திருமண, மரண, பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் சகல விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ம. சங்கரகாந்திலிங்கம்
(இளைப்பாறிய அதிபரும் சத்தியப்பிரமாணம் செய்த அரச மொழிபெயர்ப்பாளரும்) 02107

## கோழிக்குஞ்சுப் 'பட்டாளம்' வளைகுடாப் போருக்கு வருகின்றது!

வளைகுடாப் போரில் அமெரிக்கா தலைமையிலான நேசநாட்டுப் படைகளுக்கு உதவியாக கோழிக்குஞ்சுப் 'பட்டாளம்' ஒன்று இறங்கியுள்ளது.

இந்தப் பட்டாளத்தின் பணி மனிதன் உயிருடன் இருப்பதை உறுதி செய்வதற்காகத்தாங்கள் இறப்பதே!

ஈராக்கியப் படைகள் மேற்கொள்ளக்கூடியஇரசாயன ஆயுத தாக்குதல்களுக்கு எதிரான ஒருமுன்னெச்சரிக்கை அமைப்பாக கோழிக்குஞ்சுகளை நேசநாட்டுப் படைகள் பயன் படுத்துகின்றன.

சவுதி அரேபிய எல்லைப்புறமாக ஆயிரக்கணக்கான கோழிக்குஞ்சுகள் கொண்டுவந்து விடப்பட்டுள்ளன. நஞ்சு வாயுத் தாக்குதல் இடம் பெறுமிடத்து அந்த வாயு மனிதனைக் கொல்லும் நிலைக்கு வருமுன்னதாக கோழிக் குஞ்சுகளைக் கொன்றுவிடும் — அதன் பின் நச்சு வாயுவுக்கு எதிரான நடவடிக்கைகளை நேசநாட்டுப் படைகள் மேற்கொள்ள முடியும்.

இரசாயன மூலகங்களைக் கிரகிக்கக் கூடிய உயர் தொழில் நுட்ப உபகரணங்களைப் பயன் படுத்தி அபாய ஒலியை எழுப்பு முன்னதாகவே நச்சு மூலகங்களின் பிரசன்னத்தை கோழிக் குஞ்சுகளால் உறுதிப்படுத்த முடியும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

## ஸ்ரீலங்காவிற்கு எதிராகக் கடும் சர்வதேச பிரசாரம்!

## முறியடிக்க புதியஇராஜதந்திரிகளைத் தேடுகிறது அரசு!!

ஸ்ரீலங்கா அரசிற்கு எதிரான பிரசாரங்கள் சர்வதேச ரீதியில் அதிகரித்து வருவதையடுத்து அதனை முறியடிக்கும் வகையில் தனது வெளிநாட்டுக்கான இராஜதந்திரிகளை மாற்றி 'பிரசார' திறமையுள்ள புதியவர்களை நியமிக்க அரசு முழுமூச்சுடன் செயற்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

அரசிற்கெதிரான சர்வதேச பிரசாரத்தினால் அபகீர்த்தியேற்பட்டு பொருளாதார உதவிகளும், பல்வேறு சலுகைகளும் கிடைக்காது போகும் நிலை தோன்றி வருவதையடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்படுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (16)

### செஞ்சிலுவைக்கு புதிய அலுவலகம்

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிட அலுவலகம் கிளி, பொது வைத்திய சாலைக்கு அருகில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்ட அலுவலகம், களஞ்சிய கூடம், மற்றும் செயலகப் பகுதி என்பவற்றைக் கொண்டதாக இப்புதிய அலுவலகம் அமைந்துள்ளது. (ப-6)

## இந்தியாவுக்கான தூதுவராக நெவில்!

## ஏனைய நாடுகளுக்கும் புதியவர்கள்!!

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நெவில் கனகரட்ணா புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே போன்று பல வேறு நாடுகளுக்கான தூதுவர்களும் மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

சோவியத்ரஷ்யாவுக்கு டாக்டர் நிஸங்க விஜயவர்த்தனாவும், ஐக்கிய நாடுகள் சபைக்கு பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயும், சிங்கப்பூருக்கு எட்மன் ஜயசிங்கவும் நியமிக்கப்படவுள்ளதாக நம்பப்படுகின்றது. (16)

## தமிழக சட்டசபைத் தேர்தல் எப்போது? அடுத்தமாதம் சாத்தியம் என்கிறார் சுவாமி

தமிழக சட்டசபைக்கான தேர்தல் ஒருமாதத்திற்குப் பின் நடாத்தப்படுமென மத்திய சட்ட வாணிகத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இது குறித்து தமிழக ஆளுநருடனும், மாநில அதிகாரிகளுடனும் ஆலோசனைகள் நடாத்தப்பட்டுள்ளதாகவும், வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணியில் ஜனதாதள்(எஸ்) கட்சியும் இடம்பெறுமெனவும் தெரிவிக்கின்றன.

### விவசாயக்கல்லூரி ஆரம்பம்

வவுனியா தாண்டிக்குளத்தில் இயங்கிவந்த விவசாயக் கல்லூரி தற்போதைய சூழ்நிலை காரணமாக ஜனவரி 15 ஆம் திகதி முதல் கிளி. அரச அதிபரின் ஒத்துழைப்பினால் கிளிநொச்சி—வட்டக்கச்சி விவசாய பண்ணைக்கு இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது.

இக்கல்லூரியின் 3ஆம் தவணைக்குரிய கற்கைநெறிகள் மார்ச் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமைஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே சகல மாணவர்களையும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி விடுதிக்கு வந்து பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## காணாமல் போனோர்விபரங்களைக் கொழும்பு அமைப்பு சேகரிக்கிறது!

இலங்கை முழுவதிலும் இராணுவ நடவடிக்கையின் போது காணமல்போன கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களைக் கொழும்பில் உள்ள அமைப்பு ஒன்று சேகரித்து வருகிறது.

மேலும் வடக்கு கிழக்குப் பகுதியில் காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களையும் இவ் அமைப்பு சேகரிக்கிறது இப்பகுதியில் காணாமல் போனவர்களின் விபரங்களை 'சட்ட உதவித்திட்டம்'' இல. 6, அலோ அவனியு, கொழும்பு-3 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு இவ் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் கேட்டுள்ளார்.

இவ்அமைப்புக்கு சரியான விபரங்களை அனுப்பினால் அதுபற்றி கவனமெடுக்கப்படுமெனவும் இவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (74)

## பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள்;

500 மாணவர்களுக்கு அதிகமாக உள்ள சகல பாடசாலைகளிலும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்க அமைப்பு'க்கள் உருவாக்கப்படல் வேண்டுமென கல்வி அமைச்சு பணித்துள்ளது.

மாணவர்களுக்கு மதிய உணவு அட்டைகளுக்கான உணவுப் பொருட்களை இலகுவாக வழங்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புங்குடுதீவு சிப்பி துறையைத் திருத்தி பூநகரிக்கு படகுச்சேவை நடாத்த முயற்சி

புங்குடுதீவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள சிப்பி ஏற்றும் துறைமுகத்தைப் புனரமைப்புச் செய்யுமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆலோசனை கூறியுள்ளார்.

அத்துறைமுகத்தின் ஊடாக பூநகரியைச் சேர்ந்த வெட்டுக்காடு, கல்முனை துறைமுகத்துடன் தொடர்புபடுத்தித் தீவுப் பகுதிக்குத் தேவையான பொருள்களைக் கப்பல் மூலமாக இலகுவில் கொண்டுவர முடியுமெனவும் அவர் அரசாங்க அதிபருக்குச் சிபார்ப் செய்து, அதற்கான முயற்சியை எடுக்குமாறும் கோரியுள்ளார். (19)

### பெண்களுக்கு அபராதம்

சாவகச்சேரி சந்தையினுள் அளவு குறைந்த கொத்தினால் அரிசி விற்ற இரண்டு பெண்கள் விடுதலைப் புலிகளினால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டது (ப-5)

## விமானக் குண்டுவீச்சு அதிர்ச்சியால் குறைப்பிரசவம் அதிகரிக்கிறது !

விமானக் குண்டு வீச்சுச் சம்பவங்கள் காரணமாக வடபகுதியில் உடல், உளத் தாக்கங்கள் பெருமளவு அதிகரித்து வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்கம் காரணமாக இப் பகுதியில் குறைப்பிரசவம், செவிட்டுத்தன்மை, இருதயநோய், மன நோய்த் தாக்கங்கள் பெருமளவில் அதிகரித்து வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (38)

## மதிய உணவுப் பணத்தில் மோசடி!

## லட்சரூபாவுடன் அதிபர் தலைமறைவு!!

கொழும்பு கம்பஹா பகுதிகளில் பாடசாலை மதியஉணவு விடயங்களில் பல-பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

கனேமுல்ல ஜயக்கொடி மகாவித்தியாலயத்திற்கு மதிய உணவுக்காக கொடுக்கப்பட்ட 1,14,500 ரூபா பணம் மாணவருக்கு செலவிடப்படாது வங்கி வைப்பில் இடப்பட்டு பின்னர் பாடசாலை அதிபரினால் அப்பணம் பெறப்பட்டமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விடயம் அம்பலத்திற்கு வந்ததும் குறித்த அதிபர் அப் பணத்துடன் தலைமறைவாகி விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16)

### நீர்வழங்கல் சேவை மீண்டும் ஆரம்பம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் தீவுப்பகுதி மக்களுக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்டு வேலணைப்பகுதியில் சேவையிலீடுபட்ட நீர் வழங்கும் மினிபவுசர் வண்டி மீண்டும் சேவையை ஆரம்பிக்கவுள்ளது. (24)

## கலாசார யுத்தம்

அமெரிக்கப் படைகளின் வரவினால் இஸ்லாமிய கலாசாரமும், ஒழுக்கநெறியும் சிதைந்துவிடுமோ என்கிற பயம் சவுதியிற் தோன்றியுள்ளது.

கப்பற் படையைச் சேர்ந்த பெண் உயர் அதிகாரி 'றியாத்' நகரில் உள்ள கடை வீதிக்குப் போனார். சவுதி விதிகளின்படி முழு உடம்பையும் மறைக்கிற 'அபாய்யா'' என்ற நீள அங்கியை அணிந்து கொண்டு போனார். இஸ்லாமிய விதிகளை அமுல் படுத்துகிற படை... சார்ந்த ஒரு வீரர் தன்கையில் வைத்திருந்த குன்... தடியால் அந்த அதிகாரியை அடித்தார், அந்த... அதிகாரி முகத்தை மறைக்கத்தவறியதே அ... தற்குக் காரணமாம்!

## தரைப்போரைத் தவிர்க்கும் கடைசி முயற்சியில் ரஷ்யா

வளைகுடாவில் ஏற்படவுள்ள பயங்கரமான தரைப் போரைத் தவிர்க்கும் கடைசிநேர முயற்சிகள் ரஷ்யாவில் நடைபெற்றுவருகின்றன. மொஸ்கோ சென்றுள்ள ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீசும், பிரதிப் பிரதமர் ஹமாதியும் நேற்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி கோர்பச்சேவ், ரஷ்யாவின் வளைகுடாப் பிரதிநிதி பிரிமகோவ் ஆகியோருடன் பேச்சுகள் நடாத்தினர். பேச்சு விவரம் தெரியவில்லை.

### கடற்கண்ணி தாக்குதல்

இரு அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் வளைகுடாக் கடலில் கடற்கண்ணி வெடியில் சிக்கின. தரை-கடல் தாக்குதல் கப்பல் ரிப்போலியில் பாரிய துவாரம் ஏற்பட்டுள்ளது. இது நடைபெற்று இருமணி நேரத்தில் மற்றுமோர் கடற்படையின் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தும் கப்பலான பிறின்ஸ்டன் கடற்கண்ணியில் சிக்கியது. சேதம் பற்றி அறிவிக்கப்படவில்லை. இதுவே முதலாவது கடற்கண்ணித் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சந்திரசேகரின் உறுதி மொழி?

இந்தியாவில் எரிபொருள் நிரப்ப அமெரிக்க விமானங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் இந்திரா காங்கிரஸுக்கு உறுதியளித்திருந்தார். நேற்று அமெரிக்க விமானம் ஒன்று பம்பாயில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுயவிருப்பத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவருடம் பணிபுரிய விண்ணப்பிக்கலாம்

நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஆசிரியர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பிக்கலாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி இளைப்பாறிய கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தங்களது தகைமைகளின் அடிப்படையில் விண்ணப்பிக்குமாறு கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (ப11)

### கொண்டச்சித்...

தாக்குதலைத் தொடர்ந்து கொண்டச்சிப் பகுதியில் ஹெலி ஒன்று தாக்குதல் நடாத்தி வருவதாகவும் இப்பகுதியில் மேலும் கண்ணிவெடிகள் இருப்பது அங்கு படையினர் செல்லத் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அச்சுவேலி...

திருமதி செந்திவடிவேல் இந்திராணி (45), மகள் செ. யசோதா (15) ஆகியோர் காயமடைந்தனர். மேலும் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன. சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனின் வீடும் நேற்று சேதமானது குறிப்பிடத்தக்கது.

அச்சுவேலிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் அச்சுவேலி மகாவித்தியாலயம் சேதமடைந்தது. அருகிலுள்ள தென்னிந்தியச் திருச்சபைப் போதகர் வண. யோ. ஞானப்பிரகாசம் அவர்களின் குருமனை முற்றாகச் சேதமடைந்தது. மேலும் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன. (ப10 82 39, 22, ப 24)

### வெருகல்...

இவ்விரு அணிகள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். சேத விவரம் தெரியவில்லை. (71)

### மீன்...

மீன்பிடி இடைநிறுத்தம் செய்யப்பட்ட அதிகாரியின் தொலைபேசி பில்லை கட்டுத்தாபனமே செலுத்தியதும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. (33)

### காரைநகர்...

12 மணியளவில் ஊரிக்காட்டுப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதலும், திருவல் பகுதி நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டன. இதில் செ. மணிவண்ணன் கொல்லப்பட்டார். 2 பெண்கள் படுகாயமடைந்தனர். ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. (71)

## சில வங்கிகளின் அசமந்தப் போக்கினால் பல கோடி ரூபா நிவாரணம் திரும்பும் நிலை

யாழ் மாவட்டத்திலுள்ள சில வங்கிகளின் அசமந்தப் போக்கினால் பாதிப்படைந்த மக்களுக்கான பல கோடி ரூபா நிவாரணம் இன்னும் வழங்கப்படாதுள்ளது. இதனால் இந்த நிதி சிலசமயம் திரும்பிச் செல்லலாம் எனவும் கூறப்படுகிறது.

தொழில் இழந்தோர் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தோர் ஆகியோருக்கான கொடுப்பனவுகளை வழங்க யாழ் செயலகம் துரித நடவடிக்கை எடுத்து பட்டியல்களையும் வங்கிகளுக்கு அனுப்பியுள்ளது.

ஆனால் வங்கிகள் திரவப் பணம் இன்மையை சாட்டாக வைத்து இக்கொடுப்பனவுகளைச் செய்யாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்தாட்சிப் படுத்தப்பட்ட காசோலைகள் மூலமாகவோ அல்லது உரியவர்களின் பெயர்களில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வைப்பிலிடுவதன் மூலமாகவோ இக்கொடுப்பனவுகளை உடனடியாகச் செய்யுமாறு யாழ் புனர்வாழ்வுப் பிரிவு வங்கிகளைக் கேட்டுள்ளது. (66)

## வல்வெட்டித்துறை கரையை நோக்கி கடற்படைக் கப்பல்கள் வர முயற்சி

நேற்றுக் காலை 8-45 மணியளவில் இரு கடற்படை கப்பல்கள் வல்வெட்டித்துறை கரை நோக்கி வரமுயன்றன. இவற்றை எதிர்த்துப் புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இத்தாக்குதலினால் கடற்படை கப்பல்கள் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றன. இதைத்தொடர்ந்து ஹெலிகப்டர் ஒன்று வல்லை ஆதி கோவிலடி மற்றும் கரையோரப் பகுதிகளை நோக்கி சரமாரியாக சுட்டது. இதனால் நேற்று வல்வெட்டித்துறையில் பதற்றநிலை காணப்பட்டது. (39,22)

## விடுதலைப் புலிகளுக்கு அ.தி.மு.க எதிரானது அல்ல-ஜெயலலிதா

விடுதலைப் புலிகளுக்கு அண்ணா தி.மு.க எதிரானது அல்ல என்று அதன் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கான புலிகளின் போராட்டத்துக்கு அ.தி.மு.க அனுதாபமாகவே இருந்து வருகிறது எனவும் அவர் சொன்னார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிறுத்தப்படவேண்டும் எனவும் அ.தி.மு.க பலதடவைகள் எடுத்துக் கூறியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (33)

### கார்த்திகை...

திகதி வரை பணமாக வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக இவ் வங்கியின் பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### மட்டக்களப்பு...

பாடலின் போது அரசாங்க அதிபரிடம் பேக்கரி உரிமையாளர் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர் (33)

### அரச திணைக்கள...

களஞ்சியத்தையும் வவுனியாவுக்கு மாற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதாவும் தெரியவருகிறது.

இதேவேளை இயங்காத வேறு சில திணைக்களங்களையும் இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம். (33)

### கிளிநொச்சி...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கணேசபுரம் ப.நோ.கூ. சங்க அருகிலும் வைத்தியசாலையில் இருந்து 60 யார் தூரத்திலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

சில தினங்களுக்கு முன் தினம் ஒரு ஷெல் இப்பிராந்தியத்தில் வீழ்ந்துவெடித்ததும் குறிப்பிடத்தக்கது. (ப-35)

## தமிழ் நாட்டில் கூட்டணி அரசு ஏற்படாது என்கிறார் வாழப்பாடி

எதிர்வரும் தமிழக சட்டப் பேரவை தேர்தலில் அ.தி.மு.க. அறுதிபெரும்பான்மை பலம் பெறும் எனக் கூறியுள்ளார். தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி. இதனால் அ.தி.மு.க- இந்திரா காங்கிரஸ் கூட்டணி அரசு தமிழ்நாட்டில் ஏற்படாது. எனவும் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

## மத்திய வங்கிக்கு அலையும் ஹோம் பினான்ஸ் வாடிக்கையாளர்கள்

யாழ்ப்பாணம் ஹோம் பினான்ஸ் கம்பனியில் வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களில் சிலர் கொழும்பு மத்திய வங்கியில் நிவாரணம் பெறுவதற்கு அலைந்து திரிவதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஹோம் பினான்ஸ் கம்பனி மூடப்பட்டுள்ளதால் பலலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட பல தமிழர் தற்போதைய நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (33)

## கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட தமிழரின் சடலங்கள்

கல்லோயா குடியேற்றக் கிராமமான 37-ம் கொளனியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து ஐந்து தமிழர்களின் சடலங்கள் அழுகிய நிலையில் மீட்கப்பட்டன.

இவர்கள் ஒரே தினம் காணாமற் போனதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

க. நடராசா (50), கே.முருகமூர்த்தி (45), கே. கேதாரம் (40), ஏ. தெய்வேந்திரம் (48), ஆ. அருணாசலம் (47) ஆகியோரின் சடலங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (33)

## வடக்கு கிழக்குப் பகுதிகளில் பரீட்சை?

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பரீட்சைகளை நடாத்துவது குறித்து இப் பகுதி கல்விப் பணிப்பாளர்கள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் பேச்சு நடாத்தினர்.

க.பொ.த. பரீட்சைகளை நடாத்துவது குறித்து நேற்று கல்வியமைச்சில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11, 33)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 19-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.